## DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC 778/2019 |
| Deposition of witness for | Prosecution wit. PW.3 |
| Name | பரமேஸ்வரி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 23-12-2022

<u>முதல்விசாரணை</u>

1. நான் தற்போது கிழநத்தத்தில் குடியிருந்து வருகிறேன், கடந்த 20.01.2019 ம் தேதி இரவு 9.00 மணி அளவில் நான் திருச்செந்தூர் கோவிலுக்கு தைப்பூச திருவிழாவிற்கு எங்கள் உறவினரான தங்கபாண்டி என்பவருக்கு சொந்த மான மாருதி ஆம்னி வேனில் நான் , எனது தாயார் மாணிக்க தாய் , அக்கா பேச்சிதாய், பெரியம்மா வெள்ளத்தாய், எனது அக்கா மகன் மணிகண்டன் , செல்வ ஸ்ரீமகாலெட்சுமி, சங்கிதா, ஆகியோர்கள் சென்றோம்.

2. நாங்கள் கோபால சமுத்திரத்தில இருந்து கிளம்பி சென்று கோவிலுக்கு சென்று விட்டு திரும்பி வரும் போது விபத்து நடந்தது . கோவிலில் இருந்து

நாங்கள் மாலை 6.30 மணிக்கு கிளம்பி நாங்கள் அனைவரும் மேற்சொன்ன ஆம்னி பேருந்தில் வந்து கொண்டு இருந்த போது செய்துங்கநல்லூரில் உள்ள திருப்பத்தில் எதிரே வந்த மாருதி ஆல்டோ வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது.

3. அந்த வாகனத்தை பச்சை என்பவர் ஓட்டி வந்தார் . அவர் அந்த வாகனத்தை வேகமாக தவறாக ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினார் . நான் அந்த வாகனத்தின் ஓட்டுநரை நேரில் பார்த்தேனா என்றால் அவர் இறங்கி ஓடிவிட்டார் அதனால் நான் பார்க்கவில்லை.

4. நாங்கள் சென்ற வாகனத்தில் முன்பக்க கண்ணாடி , பக்க வாட்டில் உள்ள கதவு ஆகியவை சேதமடைந்தது. அந்த விபத்தின் காரணமாக எனக்கு வலது காலில் அடிபட்டு காயம் ஏற்பட்டு மூன்று நரம்புகள் துண்டிக்கப்பட்டது.

5. அக்கா பேச்சிதாய்க்கு வலது பக்க தலையில் அடிபட்டது . மற்றும் எனது அக்கா மகள் சங்கிதாவிற்கு இரண்டு தோள்பட்டையிலும் காயம் ஏற்பட்டது . மற்ற அனைவருக்கும் சாதாரணமாக காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எங்களை ஆம்னி காரில் ஏற்றி திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தார்கள்.

6. எதிரே வந்த வாகனத்தில் வந்த எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. நான் ஒருவாரம் மருத்துவமனையில் இருந்து கிகிச்சை பெற்றேன் . அப்போது செய்துங்கநல்லூர் காவல் நிலையத்தில் இருந்து ஒரு பெண் காவலர் வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் . விபத்து நடக்கும் போது நேரம் இரவு 9.00 மணி இருக்கும்.

7. அதனை படித்து பார்த்து நான் கையொப்பம் செய்தேன் . புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள

சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.4** ஆகும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

8. சம்பவத்தன்று எங்கள் வேனில் ஓட்டுநருடன் சேர்ந்து 12 நபர்கள் இருந்தோம் என்றால் சரிதான் . எங்கள் வாகனம் 5 பேர் செல்லக்கூடிய வாகனம் என்றால் சரிதான்.

9. மேற்படி மாருதி ஆம்னி ஒரு சீட் நாங்கள் செல்லும் திசை நோக்கியும் மற்றொரு சீட் நாங்கள் செல்லும் திசைக்கு எதிர் திசை நோக்கியும் இருக்கும் என்றால் சரிதான். நான் டிரைவர் இருக்கைக்கு பின்புறம் வண்டி செல்லும் திசைக்கு எதிர் திசை நோக்கி இருந்தேன் . நான் அமர்ந்து இருந்த இருக்கையில் 4 நபர்கள் இருந்தோம்.

10.நாங்கள் மேற்படி வாகனத்தில் இட நெருக்கடி உடன் தான் அமர்ந்து இருந்தோம் என்றால் சரிதான். நான் மேற்படி வாகனம் செல்லும் திசைக்கு எதிர் திசையில் இருந்ததால் முன்னே வரும் வாகனம் தெரியாது என்றால் சரிதான்.

11.ஏனெனில் எனக்கு எங்கள் வாகனத்திற்கு எதிரே எந்த வாகனம் வந்தது அது எவ்வாறு வந்தது என்று தெரியாது என்றால் சரிதான் . எனக்கு வண்டி மோதிய சத்தம் தான் கேட்டது என்றால் சரிதான். அதன் பின்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

12. மருத்துவமனையில் நான் எவ்வளவு நேரம் மயக்கமாக இருந்தேன் என்றால் விபத்து நடந்த மறு நாள் காலையில் தான் கண் விழித்து பாாத்தேன். நான் மருத்துவமனையில் கண் விழித்து பார்த்த போது சுமார் காலை 7.00-8.00 மணி இருக்கும் , அப்போது தான் செய்துங்கநல்லூர் போலீசார் என்னிடம்

வந்து விபரம் கேட்டார்கள். அதற்கு முன்பு காவலர்கள் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான் . சம்பவ இடம் ஏது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

13. நான் வந்த வாகனம் வாடகை வாகனம் என்றால் சரியல்ல . உறவினர் வாகனம், போலீசாரிடம் நான் நாங்கள் வந்த வாகனம் வாடகை வாகனம் என எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

14.என்னுடன் மேற்படி வாகத்தில் பின்னோக்கி பேச்சித்தாய் , சங்கிதா , மாணிக்கத்தாய் ஆகியோர் இருந்தோம். வாகனத்தில் அமர்ந்து இருந்தவர்கள் மடியில் செல்வஸ்ரீ , மகாலெட்சுமி, மணிகண்டன் ஆகியோர் இருந்தார்கள். ஒரு இருக்கையில் 7 பேர் அமர்ந்து இருந்தோம் என்றால் சரிதான்.

15. எங்களது வாகனத்தில் அனுமதிக்கப்பட்டதைவிட அதிகமான நபர்கள் பயணம் செய்ததால் தான் எங்கள் டிரைவரின் கவனக்குறைவின் காரணமாகவும் வாகனம் கட்டுபாட்டை இழந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

16. எதிரே வந்த வாகனம் அதிவேகமாக வந்து விபத்தை ஏற்படுத்தியது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

## DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC 778/2019 |
| Deposition of witness for | Prosecution wit. PW.4 |
| Name | பேச்சிதாய் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 23-12-2022

<u>முதல்விசாரணை</u>

1. நான் தற்போது கிழநத்தத்தில் குடியிருந்து வருகிறேன், அ.சா.3 எனது தங்கை ஆவார். கடந்த 20.01.2019 ம் தேதி நானும் அ.சா.3, நாராயணன், பரமேஸ்வரி, மாணிக்கத்தாய், மணிகண்டன், முத்துபாண்டி ஆகியோர் திருச்செந்துார் கோவிலுக்கு தைப்பூச திருவிழாவிற்கு ஆம்னி காரில் சென்று விட்டு இரவு 9.00 மணிக்கு திரும்பும் போது செய்துங்கநல்லூர் தாண்டி செல்லும் போது விபத்து ஏற்பட்டது.

2. எங்கள் வாகனத்திற்கு எதிரே வந்த ஆல்டோ கார் அதிவேகமாக வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது . நாங்கள் சென்ற

வாகனத்தின் முன்பக்க கண்ணாடி , இடது பக்கம், பின்பக்கம் உள்ள கண்ணாடி உடைந்து வண்டி தலைக்குப்புற விழுந்தது.

3. எங்கள் வாகனத்தை எங்கள் உறவினரான தங்கபாண்டி என்பவர் ஓட்டி வந்தார். எதிரே வந்த வாகனத்தின் ஓட்டுநர் விபத்து ஏற்படுத்திய பிறகு ஓடிவிட்டார். நான் அவரை பார்த்தேன். அந்த நபர் சற்று ஒல்லியாக இருந்தார்.

4. எதிரே வந்த வாகனத்திற்கு சிறிதளவு சேதம் ஏற்பட்டு இருந்தது . விபத்தின் காரணமாக எனக்கு தலைக்கு கிழ் பின்புறம் காயம் ஏற்பட்டது . என்னுடன் பயணம் செய்த மற்ற நபர்களுக்கும் காயம் ஏற்பட்டது.

5. காயம் ஏற்பட்ட நாங்கள் அனைவரும் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்க கொண்டு சென்று சேர்க்கப்பட்டோம் . அங்கு நான் 3 நாட்கள் சிகிச்சை பெற்றேன்.

6. எதிரே வந்த வாகனத்தை ஓட்டி வந்தநபரை பார்த்தால் அடையாளம் சொல்லமுடியுமா என்றால் பல நாட்கள் ஆனதால் என்னால் அடையாளம் சொல்ல முடியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

7. சம்பவத்தன்று எங்களது வாகனத்தில் ஓட்டுநனருடன் சேர்த்து 8 நபர் மட்டும் தான் இருந்தோம் . நான் அ.சா.1 பரமேஸ்வரி அருகில் தான் இருந்தேன் நான் எனது மடியில் எனது மகன் மணிகண்டன் என்பரை வைத்து இருந்தேன்.

8. நான் வாகனத்தில் டிரைவர் சீட்டிற்கு பின்னால் உள்ள சீட் என்றால் சரிதான். அந்த சீட் வண்டி செல்லும் திசைக்கு எதிர் திசை நோக்கி இருந்தது என்றால் சரிதான் . சாட்சி மீண்டும் தான் வாகனம் செல்லும் பாதைக்கு முன்னோக்கி இருந்ததாக சொல்கிறார்.

9. நான் மற்றும் அ .சா.3 ம் வாகனம் செல்லும் திசைக்கு எதிர் திசையில் அமர்ந்து இருந்தோம் என்று சொன்னால் அத பொய் ஆகும் . சம்பவ இடம் செய்துங்கநல்லூர் பெட்ரோல் பங்க்லிருந்து சுமார் 100 மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

10. நாங்கள் வந்த வாகனம் வாடகை வாகனம் என்றால் எங்கள் உறவினரின் வண்டி ஆகும் . மேற்படி வாகனம் எங்களது சொந்த வாகனம் இல்லை என்றால் சரிதான் . மருத்துவர் என்னிடம் விசாரிக்கும் போது விபத்து நடந்தது செய்துங்கநல்லூர் பெட்ரோல் பங்க்லிருந்து சுமார் 100 மீ தூரம் என்று சொன்னனா என்றால் இரவு 9.00 என்று சொன்னேன் . மற்ற விபரங்கள் சொல்லவில்லை.

11. என்னை சம்பவம் நடந்த மறுநாள் காலை செய்துங்கநல்லூர் காவலர்கள் வந்து பார்த்தார்கள் . என்னிடம் விசாரித்து எழுதியதில் நான் , சங்கிதா, பரமேஸ்வரி ஆகியோர் கையொப்பம் செய்தோம்.

12. எங்களது வாகனத்தில் அனுமதிக்கப்பட்டதைவிட அதிகமான நபர்கள் பயணம் செய்ததால் தான் எங்கள் டிரைவரின் கவனக்குறைவின் காரணமாகவும் வாகனம் கட்டுபாட்டை இழந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

13. எதிரே வந்த வாகனம் அதிவேகமாக வந்து விபத்தை ஏற்படுத்தியது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC 778/2019 |
| Deposition of witness for | Prosecution wit. PW.5 |
| Name | **நாராயணன்** |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 23-12-2022

<u>முதல்விசாரணை</u>

1. நான் தற்போது கிழநத்தத்தில் குடியிருந்து வருகிறேன், அ.சா.3 எனது கொழுந்தியாள் ஆவார். கடந்த 20.01.2019 ம் தேதி நானும் அ .சா.3, எனது மனைவி பேச்சித்தாய் , பரமேஸ்வரி, மாணிக்கத்தாய், சங்கிதா, மணிகண்டன், முத்துபாண்டி ஆகியோர் திருச்செந்துார் கோவிலுக்கு தைப்பூச திருவிழாவிற்கு ஆம்னி காரில் சென்று விட்டு திரும்பி வீட்டுக்கு செல்வதற்காக இரவு 9.30 மணிக்கு திரும்பும் போது செய்துங்கநல்லுார் தாண்டி காவலர் குடியிருப்புக்கு மேல்புறம் விபத்து ஏற்பட்டது.

2. எங்கள் வாகனத்திற்கு எதிரே வந்த ஆல்டோ கார் பதவு எண் .TN 01C0775 அதிவேகமாக வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து

ஏற்படுத்தியது. நாங்கள் சென்ற வாகனத்தின் முன்பக்க கதவு , முன் கண்ணாடி உடைந்து சேதம் ஏற்பட்டது . எதிரே வந்த வாகனத்தைஓட்டி வந்தவர் பச்சை பெருமாள் ஆவார்.

3. எங்கள் வாகனத்தை எங்கள் உறவினர் ஓட்டி வந்தார் . எதிரே வந்த வாகனத்தின் ஓட்டுநர் விபத்து ஏற்படுத்திய பிறகு ஓடிவிட்டார் . நான் அவரை பார்த்தேன். அந்த நபர் சற்று ஒல்லியாக இருந்தார்.

4. எதிரே வந்த வாகனத்திற்கு சிறிதளவு வலது பக்க டயர் சேதம் ஏற்பட்டு இருந்தது. விபத்தின் காரணமாக எனக்கு தலைக்கு கிழ் பின்புறம் காயம் ஏற்பட்டது. என்னுடன் பயணம் செய்த மற்ற நபர்களுக்கும் காயம் ஏற்பட்டது.

5. காயம் ஏற்பட்ட நாங்கள் அனைவரும் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்க கொண்டு சென்று சேர்க்கப்பட்டோம் . அங்கு நான் 2 நாட்கள் சிகிச்சை பெற்றேன்.

6. எதிரே வந்த வாகனத்தை ஓட்டி வந்தநபரை பார்த்தால் அடையாளம் சொல்லமுடியுமா என்றால் பல நாட்கள் ஆனதால் என்னால் அடையாளம் சொல்ல முடியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

7. சம்பவத்தன்று எங்களது வாகனத்தில் ஓட்டுநனருடன் சேர்த்து 10 நபர்கள் மட்டும் தான் இருந்தோம். அந்த வாகனம் வாடகை வாகனமா என்றால் அது என்னுடைய சொந்தகாரின் வாகனம் ஆகும்.

8. நாங்கள் திருச்செந்துாரில் தைப்பூச விழா முடித்து கிளம்பும் போது 8.45 – 9.00 மணி இருக்கும் .நான் மேற்படி வாகனத்தின் முன்னால் அமர்ந்து இருந்தேன். அன்றைய தினம் எனக்கு காயம் ஏதுவும் இல்லை அதனால்

நான் மருத்துவரை பார்க்கவில்லை. எங்களது வாகனத்தின் ஓட்டுநனருக்கும் காயம் எதுவும், இல்லை என்றால் சரிதான்.

9. சம்பவ இடம் ஒரு திருப்பம் என்றால் சரிதான் . அந்த இடத்தில் ஒரு பாலம் உள்ளது என்றால் சரிதான் . நாங்கள் கிழக்கில் இருந்து மேற்கில் நோக்கி வந்து இடது புற வளையில் திரும்ப வேண்டும் என்றால் சரிதான்.

10. எதிரே வந்த வாகனத்தின் பதிவு எண் . TN 01C0775 ஆகும். எதிரே வந்த வண்டிக்கு சேதம் ஏற்பட்டது . நான் அந்த வாகனத்தை பார்த்தேன் . மேற்படி வாகனதில் பரமேஸ்வரி , மாணிக்கத்தாய், பேச்சித்தாய், நான், முத்துப்பாண்டி, மணிகண்டன் செல்ஸ்ரீ, சங்கிதா உட்பட ஓட்டுநரையும் சேர்த்து 12 நபர்கள் இருந்தார்கன் என்றால் சரிதான்.

11. எங்களது வாகனத்தில் அனுமதிக்கப்பட்டதைவிட அதிகமான நபர்கள் பயணம் செய்ததால் தான் எங்கள் டிரைவரின் கவனக்குறைவின் காரணமாகவும் வாகனம் கட்டுபாட்டை இழந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

12. எதிரே வந்த வாகனம் அதிவேகமாக வந்து விபத்தை ஏற்படுத்தியது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

## DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC 778/2019 |
| Deposition of witness for | Prosecution wit. PW.6 |
| Name | மாணிக்கத்தாய் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 23-12-2022

<u>முதல்விசாரணை</u>

1. நான் தற்போது கீழ பாட்டத்தில் குடியிருந்து வருகிறேன், அ.சா.3 எனது மகள் ஆவார். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக நானும் பேச்சித்தாய், அ.சா.3, நாராயணன், பரமேஸ்வரி, மணிகண்டன், மகாலெட்சுமி ஆகியோர் திருச்செந்தூர் கோவிலுக்கு தைப்பூச திருவிழாவிற்கு மாருதி ஆம்னி காரில் சென்று விட்டு இரவு 9.30 மணிக்கு திரும்பும் போது செய்துங்கநல்லூர் அருகில் சென்ற போது விபத்து ஏற்பட்டது.

2. எங்கள் வாகனத்திற்கு எதிரே கார் வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது . நாங்கள் சென்ற வாகனத்தின் தலைக்குப்புற விழுந்தது.

3. எதிரே வந்த வாகனத்தின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை என்னுடன் பயணம் செய்த மற்ற நபர்களுக்கும் காயம் ஏற்பட்டது.

4. காயம் ஏற்பட்ட நாங்கள் அனைவரும் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்க கொண்டு சென்று சேர்க்கப்பட்டோம் . எனது மகள் பரமேஸ்வரி மருத்துவமனையில் 2 மாதங்கள் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

5. சம்பவத்தன்று எங்களது வாகனத்தில் ஓட்டுநனருடன் சேர்த்து 12 நபர் சென்றோம் என்றால் 9 பேர் தான் பயணம் செய்தோம் . நான் அ.சா.3 னின் அருகில் அமர்ந்து இருந்தேன் . எனது பக்கத்தில் பேச்சித்தாய் என்பவரும் எனது அருகில் தான் இருந்தார் . டம் என்று சத்தம் கேட்டது என்றால் சரிதான்.

6. விபத்து எப்படி எவ்வாறு நடந்தது என்று எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். திருச்செந்துாரில் இருந்து நாங்கள் கிளம்பும் போது இரவு 9.00 மணி இருக்குமா என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல . காயம்பட்ட நபர்கள் எனது உறவினர்கள் என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.